THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 32 November - 2019 Issue -11

ஆசிரியர் உரை

எசேக்கியா ராஜாவிடமிருந்து...

பரலோகில் வாழும் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, இப்பாழுலகில் வாழும் மானிடர் மேலுலகப் பேறு பெற வேண்டுமென்ற பெரு நோக்கோடு அருளப்பட்ட பரிசுத்த எழுத்துக்கள் கொண்ட பரிசுத்த வேதாகமம் முழுக்க முழுக்க உண்மைதான் என்பதற்கு ஏராளமான சான்றுகள் பூகோள ரீதியாகவும், சரித்திர ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் குவிந்து கிடக்கின்றன. இறையுணர்வும், மெய்யறிவும், சுத்த நல்மனசாட்சியும் கொண்ட எல்லோரும் ஏகமாய் ஏற்றுக் கொள்ளும்படியாய் இப்பேருண்மைகள் அநேக சாட்சிகளையும், சாட்சியங்களையும் கொண்டு நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இக்கூற்றுக்கு மேலும் வலுசேர்க்கும் வேறொரு தகவலும் உண்டென்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். அது பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கும் தேவ மனிதர்களின் வாழ்க்கையின் மூலம் நமக்குக் கிடைக்கிறது. ஆம், வேதாகமம் இவர்கள் பக்தி வாழ்க்கையின் செயல்பாடுகளைப் படம் போட்டுக் காட்டிப் பகிரங்கப்படுத்துவதோடு நிற்காமல், அவர்களின் பெலவீனச் செயல்பாடுகளையும் இருட்டடிப்புச் செய்யாமல் அம்பலப்படுத்தவும் செய்கிறது. இது பரிசுத்த வேதாகமத்தின் பாரபட்சமற்ற பார்வையையும், ஒளிவுமறைவற்ற தன்மையையும் உலகிற்குப் பறைசாற்றுகிறது. ஆம், வேதாகமம் அப்படிப்பட்ட ஒன்றுதான் என்பதை தேவனுடைய சிநேகிதன் ஆபிரகாம்

[யாக்.2:23], தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாயிருந்த மோசே [எபி.3:6], தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசன் [அப்.13:22] போன்றோர் வாழ்க்கையிலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

இவர்களின் வரிசையில் வரக்கூடிய தகுதி கொண்டவனாக யூதாவை ஆண்ட சுமார் 20 ராஜாக்களின் ஒருவனாகிய எசேக்கியா காணப்படுகிறான். யூதாவை ஆண்ட ராஜாக்களில் மிகவும் நல்லவர் கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் இரண்டு பேர். அவர்களின் முதலாமானவன் தான் ஆகாசின் குமாரனாகிய நம்முடைய எசேக்கியா மற்றொருவன் யோசியா ராஜா. எசேக்கியா என்னும் வார்த்தைகளுக்கான பொருள் **யெகோவா பெலப்படுத்துகிறார்** என்பது. பெயருக்கான பொருளுக்கு ஏற்றாற் போல் இவன் தேவனால் பெலப்படுத்தப்பட்டு தேவனுக்கான காரியங்களை பல மாய்ச் செய்திருக்கிறான். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது இவனுமா பெலவீனச் சூழலைத் தனது வாழ்வில் கடந்து சென்றான் என்று எண்ணத் தூண்டும். ஒருவேளை, பகிரங்கப் பாவங்களைச் சில தேவ மனிதர்கள் போல் எசேக்கியா செய்யாவிட்டாலும், தவிர்த்தி ருக்க வேண்டிய சில செயல்களை செய்தே உள்ளான். பாரபட்சமற்ற வேதாகமம் அப்படித்தான் நமக்குச் சொல்லுகிறது.

சரி, அவைகளையும், அவைகள் மூலம் இம்மாதம் நமக்கு என்ன பாடங்கள் கிடைக்கப் போகிறது என்பதையும் புரிந்து கொள்வதற்கு முன்பாக இவன் பற்றிய பின்னணித் தகவல்களை நமது வழக்கத் தின்படியாகத் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

வரலாற்றின் ஒரு கட்டத்தில் வடக்கு, தெற்கு என்று பிரிந்து போன தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவின் 13-ம் ராஜாதான் இந்த எசேக்கியா. தன்னுடைய 25-ம் வயதில் ராஜாவாகி 29 ஆண்டுகள் ராஜ்யபாரம் செய்துள்ளான். மார்க்க ரீதியாக இவன் செய்த சீர்திருத்தங் களுக்காக தேவ அங்கீகாரம் இவனுக்குக் கிடைத்தது. ஏனைய ராஜாக்கள் போல் இவன் ஆளுகைச் செயல்பாடுகள் ராஜாக்கள் [II ராஜா. 17- 20 அதி] II நாளாகமம் 29-32 அதி]. நூல்களோடு நின்று போகாமல் ஏசாயா தீர்க்கதரிசன நூலிலும் இடம் பெற்றுள்ளது [ஏசாயா 36-39 அதி]. வேறு எந்த ராஜாவுக்கும் இச்சிறப்பு இல்லை.

எசேக்கியாதேவனுக்காகச் செய்த பக்தி வைராக்கிய காரியங் களைக் கவனியுங்கள். 1. தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார் வைக்குச் செம்மையானதைச் செய்தான் [II ராஜா.18-3]. 2. மேடை களை அகற்றினான். 3. சிலைகளைத் தகர்த்தான். 4. விக்கிரகத் தோப் புகளை வெட்டினான். 5. மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப் பத்தை உடைத்துப் போட்டான். [II ராஜா 18:4]. 6. கர்த்தருடைய ஆல யத்தைப் பழுது பார்த்தான் [II நாளா 29:3]. 7. கர்த்தருடைய

கோபத்தைத் தணிக்கும்படி அவரோடு உடன்படிக்கை பண்ணினான் (II நாளா. 29:10). 8. தடைபட்டுப்போன பஸ்கா கொண்டாட்டத்தை எருசலேமில் ஏற்படுத்தினான் (II நாளா. 30:1). 9. சிறைபட்டுப்போன தால் பஸ்காவை வெகுகாலம் மறந்து வாழ்ந்த வடக்கு ராஜ்யத்தாரை எருசலோமுக்கு அழைத்தான்(30:5). 10. இப்படி அடுக்கடுக்கான பக்திச் சீர்திருத்தங்களால் சாலமோன் நாட்களுக்குப் பிறகு மகா மகிழ்ச்சியை எருசலேமில் கொண்டு வந்தான் (II நாளா. 30:26).

இப்படி இமயம் தொட்ட எசேக்கியா ராஜாவின் சில சறுக்கல் காரியங்களை 11 ராஜாக்கள் 20-ம் அதிகாரத்தில் நம்மால் காண முடிகிறது. ஆம், அந்நாட்களில் எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீ உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப் போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தை சுவர் புறமாகத் திருப்பிக் கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான். (20:1-3).

அவருடைய பிள்ளைகள் விடும் கண்ணீரைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் தேவன், எசேக்கியாவின் கண்ணீரையும் கணக்கில் எடுத்து ஒரு **பதினைந்து** ஆண்டுகளைக் கூட்டிக் கொடுத்தார் (11 ராஜா. 20:6). கர்த்தருடைய தானாகிய ஏசாயா அத்திப்பழ அடையைக் கொண்டு வியாதிலிருந்துமுழுமையான சுகம் கொடுத்தான். (20:7) அங்கே, **கர்த்தர் காட்டின முழுமையான இரக்கத்தின்படியான விடுதலை நிரந்தரம் என்று விசுவாசியாமல்...** கர்த்தர் என்னைக் குணமாக்குவதற்கும், மூன்றாம் நாளிலே நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவதற்கும் **அடையாளம்** என்ன என்றான்'' (20:8). இது எப்படி இருக்கு? கர்த்தருக்கு முன்பாக உண்மையும், உத்தமுமாக வாழ்ந்து, அவர் பார்வைக்கு நலமானதைச் செய்த எசேக்கியா ஓர் அவிசுவாசியைப் போல் அடையாளம் கேட்டான். அவன் கேட்டுக் கொண்டபடி தமது தாசன் மூலம் கடிகாரத்தைப் பத்துப் பாகை பின்னிட்டுப் போகும்படி தேவன் செய்திருந்தாலும், இவன் இப்படி அடையாளம் கேட்டதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

பிறகு, இவன் வியாதிப்பட்டிருக்கிறதைக் கேள்விப்பட்டு பாபிலோனின் ராஜா பெரோதாக்பலாதான் நிருபங்களையும்,

வெகுமானத்தையும், அனுப்பினான். எசேக்கியா அவர்களை அங்கீகரித்து, **தன் பொக்கிஷசாலை அனைத்தையும், வெள்ளியையும், பொன்னையும், கந்தவர்க்கங்களையும், நல்ல பரிமளத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும், தன் பொக்கிஷசாலையிலுள்ள எல்லாவற்றையும் காண்பித்தான்; தன் அரமனையிலும் தன் ராஜ்யத்தில் எங்கும் எசேக்கியா அவர்களுக்குக் காண்பிக்காத பொருள் ஒன்றும் இல்லை.** [20:13]. ஓர் அந்நிய ராஜாவுக்கு எசேக்கியா இப்படி எல்லாவற்றையும் திறந்து காட்டினதில் **தேவன் அதிருப்தி அடைந்தார்.** எசேக்கியா போன்ற தேவ மனிதர்களிடம் தேவன் இதை எதிர்பார்க்கவில்லை. அப்பொழுது, ஏசாயாவைக் கொண்டு, **உம்முடைய வீட்டில் என்பதைப் பார்த்தார்கள்.** என்று கேட்டதோடு, இதோ, நாட்கள் வரும் அப்பொழுது உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள் வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். நீர் பெறப்போகிற சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். [20:15–18].

அப்பொழுது எசேக்கியா ஏசாயாவை நோக்கி: நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான் என்று சொல்லி, **என் நாட்களிலாவது** சமாதானமும் உண்மையும் இருக்குமே என்றான் [20:19]. இங்கே ராஜா **நல்லதுதான்** என்று சொன்னது எனக்குப் புரியவில்லை. பிதாக்கள் காலந்தொட்டு, அதாவது தாவீது காலந்தொட்டுச் சேகரித்தவைகள் **கொள்ளை கொண்டு போகப்படுவதற்காகவா அவைகள் சேகரிக்கப்பட்டது.** சரி, அதுதான் போகட்டும். பாபிலோனில் உன் கர்ப்பப் பிறப்பான குமாரர்கள் **அடிமைகளாக** இருப்பார்கள் என்பது **நல்லதா?** கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்த இந்த எசேக்கியாவுக்கு அங்கே என்ன ஆயிற்று? இப்படியும் ஒரு ராஜா, இப்படியும் ஒரு தகப்பன் இருக்கலாமா? சொல்லுங்கள்.

இவைகள்தான் எசேக்கியா ராஜாவின் வாழ்க்கையில் நாம் காணும்படியாகத் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் பெலவீன நிலைப்பாடுகள் சரி, இது தரும் பாடல்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

I **எசேக்கியா தன் சித்தம் நிறைவேற வேண்டினான்.** [20:3]

கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்தும், தன் வாழ்வில் பெலவீனச் செயல்பாடுகளைக்

கொண்டிருந்த எசேக்கியா கற்றுத்தரும் முதல்பாடம், கர்த்தரின் சித்ததுக்கு எந்நிலையிலும் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பது.

எசேக்கியா ராஜா 39 வயதாயிருக்கும்போது, நீர் உமது வீட்டுக் காரியங்களை ஒழுங்கப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர்; மரித்துப் போவீர் என்று சொல்லப்பட்டது. சங்கீதம் 90:10-ல் எங்கள் ஆயுத நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியாய் எண்பது'' என்றுள்ளது. அப்படிப் பார்க்கும்போது 39 என்பது மரிக்கக் கூடிய வயதல்ல. எந்த மனிதனாக இருந்தாலும் சாவை இந்த வயதில் ஏற்றுக் கொள்வதற்கு மனம் இடங்கொடுக்காது. அதுவும் தேவனுடைய பார்வையில் செம்மையானவனாகவும், மக்களின் பார்வையில் நன்மையானவனாகவும் இருக்கும்போது இச்செய்தி அவன் மனதில் இடியாகவே இறங்கியிருக்கும். எவ்விதச் சந்தேகமுமில்லை. ஆனால், வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தும், பிழைக்கமாட்டீர் என்று சொன்னவர் கர்த்தர் ஆயிற்றே. அவர் **காலங்களின்** தேவனாக இருக்கிறாரே. அவரிடத்தில் ஞானமும் பெலனும் உண்டே [யோபு 12:16]. நாளைக்கு என்ன நடக்கும் என்பது அவருக்குத்தானே வெளிச்சம். அப்படித்தானே!

கர்த்தருடைய பார்வையில் ஒருவன் செம்மையாக இருப்பதற்கான இலட்சணங்களில் ஒன்று அவர் சொல்லுக்கு அப்படியே கீழ்ப்படிவது. ஏகபுத்திரன் ஈசாக்கை பலியிடும்படி தேவன் ஆபிரகாமிடத்தில் கேட்டபோது அவன் அப்படித்தான் செய்தான் [ஆதி-22 ஆதி]. நமது ஆண்டவராகிய இயேசு சிலுவை மரணம் எதிர்கொண்ட நேரத்தில், **பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும் ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபித்தார்.** [லூக்;22:42]. ஒருவேளை, இயேசுவின் காரியம் இவனுக்குத் தெரியாமல் இருந்திருந்தாலும் ஆபிரகாம் போன்ற முன்னுதாரணங்கள் இருந்ததே.

எசேக்கியா கர்த்தரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்காமல் அழுது விண்ணப்பித்ததின் விளைவாக அவனுக்குப் பதினைந்து ஆண்டுகள் கூட்டி வழங்கப்பட்டது. இந்த போனஸ் ஆண்டுகளில் பிறந்தவன் தான் மன்னன் மனாசே. தகப்பனுக்கு நேர் எதிரான நிலைப்பாட்டைப் பக்தி வாழ்வில் எடுத்து அருவருப்பான காரியங்களைத் தேசத்தில் நடப்பித்து **கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்.** போச்சா, ஒரு தேசமே வீணாய்ப் போச்சா! தேவனுடைய பார்வையில்தேவனுடைய தனிமனிதனின் நலம் முக்கியமா? ஒட்டு மொத்த தேசத்தின் நலன் முக்கியமா? இவன் கர்த்தரின் சித்தத்தை ஏற்றிருந்தால் இந்த ஆன்மீக அவலத்தை தவிர்த்திருக்கலாம் தானே, சொல்லுங்கள். அரசாண்ட பதினான்கு ஆண்டுகளில்

அவன் காணாததையா அவன் அடுத்த பதினைந்து ஆண்டுகளில் கண்டிருப்பான்? வாய்ப்பே இல்லை. தேவ சித்தத்திற்கு இவன் தன்னை ஒப்புக் கொடுத்திருந்தால் ஓட்டு மொத்த யூதாவின் சரித்திரமே மாற்றி எழுதப்பட்டிருந்திருக்கலாமோ?. யாருக்குத் தெரியும்?

அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையிலும் கூட நாம் எப்பொழுதும் தேவ சித்தத்திகு ஒப்புக்கொடுக்கிறவர்களாகவே இருக்க வேண்டும். தேவ சித்தம் என்று வரும் போது நம்முடைய அறிவுக்கும் விருப்பத்திற்கும் விடை கொடுத்து விட வேண்டும். அப்படிச் செய்வோமானால் நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சபை வாழ்விலும், சமுதாய வாழ்விலும், அவலங்களையும், அவமானங்களையும் தவிர்க்க முடியும்.

11 **எசேக்கியா தேவ வார்த்தையை முழுமையாக நம்பவில்லை** [20:8]

கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தும், தன் வாழ்வில் பெலவீன நிலைகளைக் கொண்டிருந்த எசேக்கியா கற்றுத் தரும் இரண்டாம் பாடம், கர்த்தரின் வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது.

அவனுடைய கண்ணீரைக் கண்டு உன் நாட்களோடு பதினைந்து வருடங்களைக் கூட்டுவேன் என்று சொன்ன கர்த்தர், அத்திப்பழ அடையின் மூலம் பற்றுப்போட்டு, மரணத்தின் விளிம்பில் இருந்த அவனுக்குச் சுகத்தையும் கொடுத்து விட்டார். அவன் உயிர் பிழைத்ததன் மூலம் 15 ஆண்டுகளும் உறுதியாகிவிட்டது. இது போதாதா கர்த்தர் சொன்னபடி காரியங்கள் நடக்கும் என்பதற்கு. ஆனால், அவன் கர்த்தரின் வார்த்தையை நம்ப வேண்டிய அளவுக்கு நம்பாமல், **மூன்றாம் நாளில்** கர்த்தரின் ஆலயம் செல்வதற்கு **அடையாளம்** வேண்டும் என்று கேட்டான். இதே கர்த்தர் தான், வீட்டுக் காரியங்களை ஒழுங்குபடுத்தும், நீர் பிழைக்க மாட்டீர் என்றார். அந்த வார்த்தைகளை நம்பி, அழுது புலம்பி விண்ணப்பம் செய்த எசேக்கியா, இப்பொழுது மாத்திரம் எதற்கு அடையாளம் கேட்க வேண்டும்? ஏதாவது நியாயம் இருக்கிறதா? எசேக்கியா போன்றவர்களுக்கு இது கண்டிப்பாக அழகல்ல.

நியாயாதிபதிகளின் நாட்களில் கிதியோன் ஓர் எக்கச்சக்க சூழ்நிலையில் தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று எதினாலே அறிவேன்'' என்று கேட்டதையும், எசேக்கியா ராஜா அடையாளம் கேட்டதையும் நாம் ஒப்பிட முடியாது. (நியாயா. 6:36-40). பொதுவாக, தேவனை நம்பாதவர்களும், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களும்தான் அடையாளம் கேட்டிருக்கிறார்கள். அப்பொழுது, வேதபாரகரிலும், பரிசேயரிலும் சிலர் அவரை

நோக்கி: போதகரே உம்மால் ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக இந்தப் **பொல்லாத** விபச்சார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும், யோனா தீர்க்க தரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை'' [மத்.12:38,39] என்றார். கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்த எசேக்கியா, **பொல்லாத விபச்சார சந்ததியார்** என்று அடையாளம் காணப்பட்ட இவர்கள் வரிசையிலா சேர வேண்டும்?

அருமையானவர்களே! தேவனுடைய வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதில் நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? அநேகராகிய நாம் எசேக்கியா போல் தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்ய விரும்புகிறவர்களாக இருந்தாலும் தேவனுடைய வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லையே! வேதவாக்கியங்கள் ''**எல்லாவற்றுக்கும் போதுமானதாகவும்** [11 **தீமோ 3:16,17**], **ஜீவனும் வல்லமையும் உடையதாக இருந்தாலும்** [எபி.4:12]. அவைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அற்புத அடையாளங்களை நாடுகிறவர்களாகத்தானே இருக்கிறோம். இது நியாயமா? ஆன்மீக வாழ்வின் எல்லா நிலைகளிலும் தேவன் தம்முடைய வார்த்தைகளில் என்ன சொல்லியிருக்கிறாரோ அதை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் சிறந்தது. ஏனெனில், அவருடைய வார்த்தைகள் தான் நம்மை இறுதிநாளில் நியாயந்தீர்க்கப் போகிறது [யோவான்; 12:48].

111 எசேக்கியா தேசம், சந்ததி பற்றி கவலைப்படவில்லை [வச.17,18]

கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தும், தன் வாழ்வில் பெலவீன செயல்பாடுகளைக் கொண்டிருந்த எசேக்கியா கற்றுத் தரும் இன்னொரு பாடம், தன்னுடையவைகள் பற்றிய அக்கறை வேண்டும் என்பது.

மறுபடியும் சொல்லுகிறேன், **தேசத்திற்கு ஆபத்து, உன் சந்ததிக்கு ஆபத்து** என்று கர்த்தரின் நாமத்தில் ஏசாயா சொன்னபோது, கர்த்தருடைய வார்த்தை **நல்லது**; என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே [11 ராஜா 20:19] என்று சொன்னதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கர்த்தருக்காகப் பெரிய பெரிய வேலைகளைச் செய்த எசேக்கியாவா இப்படி என்று எண்ணாமல் இருக்கவும முடியவில்லை. தேவ வார்த்தைக்காண முக்கியத்துவமும், மரியாதையும் குறையும்போது சூழ்நிலைகள் எப்படியெல்லாம் மாறுகிறது பாருங்கள்! ஆன்மீகக் காரியங்கள் எப்பொழுதும் ஒரு சந்ததியோடு முடிவுக்கு வந்துவிட வேண்டுமென்பது தேவத்திட்டம் அல்ல. அவைகள் தலைமுறை தலைமுறைக்குமானது. ஆதியாகமம் 18:19–ஐப் பாருங்கள். **கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை**

நிறைவேற்றும்படியாய் அவன்தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.

அப்படியானால், தேவக் காரியங்கள் பற்றி தேவத்திட்டம் என்ன? ஒரு சந்ததிக்கா தேவ காரியங்கள்? இல்லவே இல்லை. உண்மை நிலை இப்படி இருக்கும்போது, எசேக்கிய ராஜா அவன் நாட்களில் நடப்பித்த ஆன்மீகச் சீர்திருத்தங்கள், அவன் காலத்தோடு முடிந்து போகப் போகிறது என்ற கட்டம் வந்தபோது எப்படிக் அவனால் கலங்காமல் இருக்க முடிந்தது? உண்மையாகவே எனக்குப் புரியவில்லை.

அருமையானவர்களே! நாம் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? எசேக்கியா தன் ராஜ்ஜியம் பற்றியும், தன் சந்ததி பற்றியும் கவலைப்படாமல் இருந்தது போல, நாம் சபையாகிய ராஜ்ஜியம் பற்றியும், கர்த்தர் நமக்குக் கொடுத்த பிள்ளைகள் பற்றியும் கவலைப்படாதவர்களாக உள்ளோமா? நம்முடைய பக்தி எசேக்கியா போல் உள்ளதா? சிந்திப்போம்.

பிள்ளைகளை **நடக்க வேண்டிய வழியிலே அவர்களை நடத்துவது பெற்றோர் மீது விழுந்த கடமை** [நீதி.22:6]. அங்கே எசேக்கியா பொறுப்பற்று இருந்ததால், வந்த ஆபத்து உலகப்பிரகாரமான ராஜ்ய பாரத்துக்கும், அழிந்துபோகும் சரீரத்துக்குமான ஆபத்து. ஆனால், இன்றைக்கு சபை முன்னோடிகளும், பெற்றோரும் பொறுப்பற்றிருப்பதால் வரக்கூடிய ஆபத்து முடிவில்லாத நித்திய ராஜ்யத்துக்கும் முடிவில்லாதஆத்துமாவுக்குமான ஆபத்து. ஜாக்கிரதை அவசியம்.

எபிரெயர் ஆசிரியர் கூறும்போது, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலை யற்றிருப்பபோமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்? [எபி.2:3,4] என்றல்லவா கேட்கப் பட்டுள்ளது.

ஆகையால், எசேக்கியா ராஜாபோல் நாம் இராமல் சபையாகிய ராஜ்ஜியம் குறித்தும், நம்முடைய பிள்ளைகளின் எதிர்கால ஆவிக்குரிய வாழ்வு குறித்தும் கவலைப்படுகிறவர்களாக இருந்து தேவனுக்குப் பிரியமானவைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் செய்யாமல் ஓயிருள்ளவரை செய்கிறவர்களாயிருப்போம். ஆமென்!!

தேவனுடைய கிருபை

Bro. J.C. **சோட்**

தேவனுடைய கிருபையால் நாம் இரட்சிக்கப்படுகிறோமென்று அருகாமையிலுள்ள மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரால் அடிக்கடி சொல்லக்கேட்கிறோம். கிறிஸ்துவின் சபையாராகிய நாம் இரட்சிப்பு சம்பந்தமாகக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவத்தைப் பற்றித்தான் போதிக்கிறோம். தேவனுடைய கிருபையில் விசுவாசம் வைப்பதில்லை என்கிற தவறான எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பிவிட்டிருக்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல. உண்மையைச் சொல்லப் போனால், நாங்கள் இரண்டையும் விசுவாசிக்கிறோம். எங்கள் நம்பிக்கைகளைக் குறித்து உங்களுக்கும் விளக்க விரும்புகிறோம்.

I. கிருபை என்பது இரக்கம், தயை, அன்பு, கருணை போன்ற செயல்களாகும்.

இழந்து போன உலகிற்கு இரட்சிப்பைத் தருவதற்குத்தான் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16) இந்த இடத்தில்தான் கிருபை அவசியமாகிறது. தேவன் இரட்சிப்பை நல்கினார். அப்படி நல்கின இரட்சிப்பின் ஈவை, தேவன் நிபந்தனைக்குட்படுத்திவிட்டார். மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவன் எப்போதுமே இதேவிதமாகத்தான் செயல்பட்டு வருகிறார். மனிதன் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருப்பதால் இது கிருபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுமா? நிச்சயமாக இல்லை. ஏனென்றால், தேவனுடைய கிருபையில்லாமல் மனிதனால் தன் இரட்சிப்பைச் சம்பாதிக்கவே முடியாது.

மேற்சொல்லப்பட்ட உண்மையை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் ஒரு வசனப்பகுதியை நாம் இப்போது பார்ப்போம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு என்று பவுல் சொல்லுகிறார் (எபேசியர் 2:8,9). இவ்வசனப் பகுதியை வாசிக்கும் அநேகர் கிருபைதான் இரட்சிக்கிறது. இதில்

கிரியைக்கு எந்தப் பங்கும் இல்லை என்று நினைக்கிறார்கள். ஆனால் இவ்வசனப் பகுதியை நாம் சற்று உற்று நோக்கும்போது, தேவன் தம்முடைய கிருபையினால் இரட்சிப்பைத் தருகிறார். ஆனாலும் மனிதனுடைய பங்காக அவன் அதை விசுவாசிக்க வேண்டும். இங்கே, தேவனுடைய பங்குதான் கிருபை, தயை, இரக்கம் போன்றவைகளெல்லாம். அதாவது, தேவன் தம்முடைய பங்காக இரட்சிப்பைக் கொடுத்திருக்கிறார். அதற்கு மனிதன் தன்னுடைய பங்காக என்ன செய்திருக்கிறான்? தேவன் மனிதனுக்கு இரட்சிப்பை சாத்தியமாக்கியிருக்கிறார் என்பதற்காக மட்டும் மனிதன் இரட்சிக்கப்படுவதில்லை. மாறாக, மனிதனால், கிருபையை நிராகரிக்கவும் முடியும், அதை ஏற்றுக் கொள்ளவும் முடியும்.இதை மனிதனால் எப்படிச் செய்ய முடியும்? விசுவாசத்தின் மூலமாகத்தான் மனிதன் அதைச் செய்ய முடியும்.

அப்படியானால், விசுவாசத்தில் உள்ளடங்கியிருப்பது என்ன? கீழ்ப்படிதல். ஒருவர் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்யும் அளவுக்குப் போதுமான விசுவாசம் இருந்தால், அந்த நபர் தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கிருபை மற்றும் இரக்கத்தினால் இரட்சிக்கப்படுவார். ஒரு மனிதன் பாவங்கள் போகக் கழுவப்பட வேண்டுமானால், கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்று வேத வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன [மாற்கு 16:16; அப்.2:38]. ஆகையால், இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத்தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு [அப்.22:16] என்று கர்த்தரின் மனிதன் பவுலுக்கு எடுத்துரைத்தான்.

II. மனிதன் கிரியைகளினாலே மாத்திரம் இரட்சிக்கப்படுவதில்லை என்று பவுல் சொல்லுகிறார்.

இங்கே அப்போஸ்தலன் பவுல் எதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்? அவர், ஒரு மனிதன் கிறிஸ்தவராக, கீழ்ப்படிய வேண்டிய பிரமாணங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரா? அப்படியானால், அது விசுவாசம், மனந்திரும்புதல், கிறிஸ்துவை அறிக்கை செய்தல் போன்ற காரியங்களை எடுத்துப் போட்டு விடும். அவர், கிரியைகள் அல்லது கீழ்ப்படிதலைப் பற்றிப் பேசினால் ஒருவர் இரட்சிக்கப்பட அவருடைய பங்காக எதையும் செய்ய வேண்டிய தில்லை. மாறாக, தேவன் எல்லோரையும் வெறுமனே இரட்சித்து விடுகிறார் என்றாகிவிடும். ஆனால், இவ்வேதபகுதியை நீங்கள் உற்றுக் கவனித்தால், அப்போஸ்தலனாகிய பவுல், மோசேயினுடைய

பிரமாணத்தின் கிரியைகள் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார். நியாயப் பிரமாணத்தின் கீழ் எல்லாம் கிரியைகளைச் சார்ந்ததாகத்தான் இருந்தது. அப்போஸ்தலனாகிய யோவான், எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின என்று எழுதினார் [யோவான் 1:17]. ஆகவே, நாம் இன்று நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிக்கப்படாமல், தேவனுடைய கிருபையால், அதாவது,இயேசு கிறிஸ்து மூலமாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் பாவமன்னிப்புக்கான நிபந்தனைகளுக்கு நம்மை உட்படுத்தும் போது இரட்சிக்கப்படுகிறோம். இது குறித்து, எபேசியர் 2:10- ல் பவுல், ஏனெனில் நற்கிரியைகளைச் செயகிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்று சொல்லுகிறார்.

நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமான போது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதாந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார் என்று பவுல் சொல்லுகிறார் [தீத்து 3:4-7]. இந்த வசனங்கள் எபேசியர் 2:8,9-ம் வசனங்கள் எவைகளைச் சொல்லுகிறதோ அவைகளையே சொல்லுகின்றன. அதாவது, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரன் மூலமாக மனித இனம் இரட்சிக்கப்படும் படியாகத் தம்முடைய இரக்கத்தைப் பொழிந்தருளினார். நாம் நம்முடைய நீதியினிமித்தம் இரட்சிக்கப் படாமல், தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாகத்தான் இரட்சிக்கப்படுகிறோம் மேலும், நாம் தேவன் தம்முடைய இரக்கத்தினாலேயும், மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சிக்கப் படுகிறோம். என்றுள்ளதைக் கவனிக்க வேண்டும். இவ்வசனப் பகுதியில் மறுஜென்ம முழுக்கு என்பது ஞானஸ்நானத்தையும் ஒருவர் அதற்குத் தன்னை ஒப்புக் கொடுத்து புதிய சிருஷ்டியாய் மாறும் மாற்றத்தையும் குறிக்கிறது. பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்

கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்த என்றார் [அப்.2:38]. ஆன படியினாலே, கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும் முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் [அப்.3:19,20].

கடைசியாக, நாம் பார்க்கும்போது, ஒருவர் இரட்சிக்கப்படுகிறாரென்றால் அவர் தேவனுடைய கிருபையால்தான் இரட்சிக்கப்படுகிறார். இப்படிச் சொல்லுவதால், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமலேயே இரட்சிக்கப்படமுடியுமன்று அர்த்தமாகாது. மாறாக, ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் சொல்லியிருக்கிறவைகளைத் தவறாமல் செய்து அவர் அளிக்கும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படியெனில், ஒருவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி [லூக்கா 13: 3]. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு [மத்தேயு 10:32]. இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள ஞானஸ்நானம் பெற வேண்டும் [மாற்கு 16:16]. ஒரு மனிதன் இரட்சிக்கப்பட இவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து உபதேசித்துள்ளார். இப்படிப்பட்ட பிரமாணத்திற்கு மனிதன் கீழ்ப்படியும்போது, தேவன் தம்முடைய கிருபையினால் மனிதனை இரட்சிக்கிறார். ஒரு தனி மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்வதுமில்லை, இரட்சித்துக் கொள்ளவும் முடியாது.

ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து தன் வாழ்நாள் முழுவதும் இரட்சகருக்குச் சேவை செய்து அவரைப் பிரியப்படுத்தி, அவருக்குப் உண்மையாய் வாழ்ந்தால் கூட, அந்நபருடைய நித்திய இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபை அவசியமாக இருக்கிறது. ஆகவே, மனிதன் தன்னுடைய இரட்சிப்பைச் சம்பாதித்துக் கொள்ள தன் வாழ்நாள் பாவங்களுக்கான கிரையத்தைச் செலுத்தவே முடியாது. தேவன் சொல்லியிருக்கிற எல்லாவற்றையும் செய்துமுடித்த பிறகும் கூட மனிதன் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபையையே சார்ந்திருக்கிறான். முடிவாக, தேவகிருபையே ஒரு மனிதனை இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்துகிறது. ✝

பெண்கள் பகுதி

தேவ பக்தியுள்ள பெண்

Sis. ரேச்சல் சாலமோன்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவ பக்தியுள்ள பெண் என்றால் தேவனுக்கு பிடித்த படி, தேவன் சொல்லிய படி அல்லது தேவனுடைய சித்தத் தின்படி செய்கிற பெண். ஏவாள் துவங்கி சாராள், அபிகாயில், எஸ்தர், நீதிமொழி 31 –ல் வாசிக்கப்படும் குணசாலியான ஸ்திரீ, இயேசுவின் தாயாகிய மரியாள், எலிசபெத், பிரிஸ்கில்லா இப்படி பல ஸ்திரீகள் தங்கள் விசுவாசமுள்ள வாழ்க்கையினாலே வேதாக மத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் தங்கள் இஷ்டப்படி வாழாமல் தேவன் சொல்லியபடி வாழ்ந்தவர்கள். தங் கள் வாழ்க்கை ஆகவே தங்கள் இஷ்டபடி வாழலாம் என்று எண் ணாமல் தேவனுக்கு சொந்தமானது என்று எண்ணியவர்கள். எப் படி இவர்களால் இப்படி வாழ முடிந்தது, நானும் இவ்வாறு வாழ என்ன செய்ய வேண்டும் என்று வேதாகமத்தின் துணை கொண்டு பார்ப்போம். பல காரணங்கள் இருந்தாலும் சிலவற்றை மாத்திரம் இம்மாதம் காண்போம்.

முதலாவது தேவனுடைய பெண் அவருடைய வார்த்தைகளுக்குள் இருக்க வேண்டும்.

தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமின்றி இச்சையினால் உலகத்திலுண்டதன கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையு மான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. (I பேதுரு 1:3,4). ஆம், எல்லாவற்றிற்கும் நமக்கு வசனம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது!! என்பது அப்படியா னால் எவ்வளவு சிலாக்கியம் இது. எவ்வளவு தூரம் நமக்குள் வச னம் இருக்க வேண்டும்? இது நம்மை ஆச்சரியப்படுத்த வைக்க வேண்டாமா? நம்மை தாழ்மைபடுத்தக் கூடாதா? இதற்கு நாம் நன்றியாக இருக்கக் கூடாதா? அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொ ழுக்கமுள்ளவர்களும், அவதுறு பண்ணாதவர்களும், தெளிந்த புத் தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமா யிருக்க வேண்டும்.

(I தீமோ: 3:11) நாம் வேதாகமத்தைத்யே வாசிக்காமலும், தியானிக்காமலும் இருந்தால் தேவன் தம்மிடத்தில் என்ன எதிர் பார்க்கிறார் என்பதை தெரிந்து கொள்வதெப்படி? விசுவாசத்தில் வளர்வதெப்படி? நன்மை தீமை எது என்று எப்படிப் பிரித்துப் பார்க்க இயலும்?

பரிசுத்தம் என்று எடுத்துக் கொண்டாலும் அதுவும் மிக அவசியம். நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (I தெச: 4:3) II தீமோ 2:22, யாக்: 1: 21,27 ஆகிய வசனங்களில் எண்ணத்திலும், சரீரத்திலும் பரிசுத் தம் அவசியம் என்பதைக் கற்றுக் கொள்ள முடியும். இயேசுவின் மூலம் மட்டுமே நாம் மாம்ச இச்சை பாவம் இவைகளை மேற்கொள்ள முடியும்.

இரண்டாவதாக, தேவனுடைய பெண் வேலைக்காரர்களைப் போல் கடினமாக உழைக்க வேண்டும்.

நீதி: 31 –ம் அதிகாரத்தில் குணசாலியான ஸ்திரீயினுடைய உழைப்பு பற்றி வாசிக்கிறோம். அன்புடன் வேலைகளைச் செய்ய வேண்டும். உலகத்தில் உள்ளவர்களுக்கும், நமக்கும் அவசியம் வேறுபாடு வேண்டும். பெண்களாகிய நாம் நம்முடைய குடும் பத்தைப் பெறுப்புடனும், அக்கறையுடனும் கவனிப்பதை நம் தலையாய கடமையாக எடுத்துக் கொள்ள வேண்டும். (தீத்து 2, I தீமோ: 2:10, 5:14). சபையிலும் நாம் செய்ய வேண்டிய வேலைகள் என்று நிறைய உள்ளன. சபை கூடி வரும் இடத்தை சுத்தம் செய் தால், பெண்களுக்கென்று வகுப்புகள் நடத்தி கலந்து கொள்ளு தல். சிறிய பிள்ளைகளுக்கு வேதாகமத்தை கற்றுக் கொடுத்தல், கர்த்தரின் பந்தி பாத்திரங்களைக் கழுவி சுத்தம் செய்தல், சரீர பெல வீனம் உள்ளவர்களை விசாரித்தல் இப்படி கூறிக் கொண்டே போ கலாம். எந்த வேலையையும் முழு மனதோடும், உற்சாகத்தோடும் செய்து பழக வேண்டும்.

மூன்றாவதாக, தேவனுடைய பெண் தகுதியோடு இருக்க வேண்டும்.

மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங் கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்கார மாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது (I பேதுரு 3:3,4).

ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது பொன்னினாலாவது முத்துக்களினாலாவது விலையேறப் பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவ பக்தியுள்ளவர்களன்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும் (தீமோ:2:9,10).

தகுதி என்றால் என்ன? ஏதோ நாம் உடுத்தும் உடை மட்டுமல்ல. அது வாழ்க்கை முறை. நான் எவ்வாறு இருக்கிறேன், என் உடை எப்படி, என் தோற்றம் எப்படி என்பதை நினைத்துக் கொண்டிருக்கவே நேரம் போதவில்லையென்றால், தேவன் என்னை எப்படிப் பார்க்கிறார் என்று எண்ணுவதற்கே நேரம் இல்லாமல் போய்விடும். சரீர அழகை விட ஆவிக்குரிய அழகு தான் முக்கியம்.

நாம் அணிந்து கொள்பவைகள் ஏன் அவ்வளவு முக்கியப்படுத்தப்படுகின்றன. முதலாவது, மக்கள் நம்மைப் பார்க்கிறார்கள். நம்மைப் பற்றி சிந்திக்கிறார்கள். பிறகு, நம் மூலமாக தேவன் மகிமைப்பட வேண்டும். இதுதான் முக்கியம்.

மேலும், தகுதியான உடை அணிவதன் மூலம் இச்சை என்ற பாவம் தவிர்க்கப்படுகிறது(மத்:5: 27–30). எனவே தான், ஆவியானவர் மூலம் தகுதியுடைய ஆடை ஆபரணங்களைப்பற்றி தேவன் பேசுகிறார். வேத வாக்கியங்களெல்லாம் தேவனுடைய ஆவியினாலே அருளப்பட்டவைகள்.

பிரியமான சகோதரிகளே! நாம் அடிக்கடி வாசித்தும், கேட்டும் இருக்கிற வசனங்கள் தான் இவைகள். ஆனாலும் இவைகளை கைக்கொள்வதில் கால முழுவதும் சிக்கலாகவே தான் இருக்கிறது. இவைகளின்படி நம் வாழ்க்கை முறை இல்லையென்றால் நாம் தேவனுடைய பெண்ணாகவே இருக்க முடியாது. இதை ஏதோ போகிற போக்கில் எடுத்துக் கொள்ளாமல் நமக்கு நாமே கேள்விகளைக் கேட்டு குறைகளை களைந்து போடுவோம். வேத வசனம் என்ற கண்ணாடியிலே நம்மைப் பார்த்து திருத்திக் கொள்ளாதபடி எப்போதும் நமக்கும் வேத வசனம் என்ற கண்ணாடிக்கும் நடுவில் ஒரு திரையை போட்டு மறைத்துக் கொள்ளாமல், யதார்த்த நிலைமையை பார்த்து நாம் திருத்திக் கொண்டு தேவனுடைய பெண்களாக வாழ்வோம் – ஆமென்.

வெளிச்சம் உண்டாகக்கடவது

Dr. **ஏபில் நாயகம்**

இருளின் அதிகாரத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகவும், திட்டமாகவும் இருந்தது. ஏதேன் தோட்டத்திலே தனக்கும், தான் உண்டாக்கின மனிதனுக்கும் இருந்த உறவில் ஏற்பட்ட பிளவு சீர் செய்யப்பட வேண்டும் என்பது தேவனின் பிரதான திட்டமாய் இருந்தது. எனவே, காலம் நிறைவேறின போது தன்னுடைய சொந்த குமாரனை இந்த பூமிக்கு அனுப்பினார். குரானாகிய கிறிஸ்து என்ன செய்வார் என்பது ஏற்கவே தீர்க்கதரிசியாகிய ஏசாயா மூலம் முன்னறிவிக்கப்பட்டது. ஏசாயா 9அதிகாரம் 1,2 வசனங்களை வாசித்தால், ... முந்தின காலத்தைப் போல இருண்டிருப்ப தில்லை... என்றும் இருளில் நடக்கின்ற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியி ருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது என்றும் வாசிக்கி றோம். மத்தேயு 4 ஆம் அதிகாரம் 14 மற்றும் 15 ஆகிய வசனங் களில் அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றுதலை நாம் வாசிக்க முடியும். பாவத்தின் பிடியிலிருந்த இருண்டு போன உலகத்தை மீட்கும் வெளிச்சமாக இயேசு கிறிஸ்து வந்தார். யோவான் 8–ஆம் அதிகாரம் 12ம் வசனத்தில் நான் உலகத்திற்கு ஒளியாயி ருக்கிறேன் என் கூறுவதை இயேசு தாமே சொல்லியிருக்கிறார்.

மத்தேயு 5 ஆம் அதிகாரத்தின் 15 வது வசனத்தை வாசிக்கும் போது, நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்று தன்னைப் பின் தொடர்ந்து வந்த ஜனங்களுக்கு சொல்லுகிறார். இந்த வசனத்தின்படி பார்க்கும் போது, அவரை பின்பற்றுகிற நா மும் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறோம். I தெசலோனிக் கேயர் 5ஆம் அதிகாரம் 5 ம் வசனம் இப்படியாக சொல்லுகிறது. **நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் என்று,** ஆம், கிறிஸ்துவின் ஒன் றான மெய் சத்தியத்தை அறிந்து அதற்கு கீழ்ப்பட்டிருக்கிற ஒவ் வொருவரும் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் இரவுக்கும் இருளுக்கும் உடன்பட்டவர்களல்ல.

எப்பஜ இயேசுவானவர் பாவத்தால் இருண்டிருந்த பூமியின் மீது ஒளியாக சுற்றிவந்த பொழுது இருளிலிருந்தவர்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்களோ, அதுபோல நாமும் நாம் பெற்றுக் கொண்ட ஒளியை உலகத்தார் மத்தியில் பிரகாசிக்கச்செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். மத் 5 ம் அதிகாரம் 16 ம் வசனத்தில் இயேசு இப்படியாக சொல்கிறார். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துபடி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பாகப் பிரகாசிக்ககடவது.

பிரியமானவர்களே! இயேவானவர் ஒளி வீச சரீரத்தில் இப்பொழுது நம்மோடு இல்லை. எனவே, இருளின் அதிகாரத்திலுள்ள மக்களை வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றத் தேவையான ஜீவ ஒளியை அவர் நம்மிடம் விட்டுச் சென்றிருக்கிறார். எப்படி இயேசுவானர் பூமியில் இருந்த பொழுது இருளிலிருந்த ஜனங்கள் வெளிச்சத்தைக் கண்டார்களோ அதைப்போல இருளின் அதிகாரத்திலுள்ள இந்த உலகத்தின் மத்தியில் பிரகாசிக்கிற பிள்ளைகளாக நாம் இருக்க வேண்டும். இது நம்மேல் விழுந்த தலையாய கடமையாக இருக்கிறது. இதை நம்மில் எத்தனை பேர் புரிந்திருக்கிறோம்? புரிந்தவர்கள் எத்தனை பேர் உணர்ந்திருக்கிறோம்? உணர்ந்தவர்கள் எத்தனை பேர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறோம்?

நாம் பிரகாசிக்க வேண்டுமானால், முதலாவது நாம் ஒளியோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். ஒளியாகிய இயேசுவோடு தொடர்பு இல்லாதவர்களால் எப்படி பிரகாசிக்க முடியும்? நாம் ஒளியோடு ஐக்கியப்பட வேண்டுமானல் நம்மில் இருளின் கிரியைகள் காணப்படக் கூடாது. இருளும் ஒளியும் எப்படி ஒன்று சேர இருக்க முடியும்? ஒளியாகிய இயேசுவோடு தொடர்பு வைத்துக் கொண்டு இவ்வுலகத்தில் பிரகாசிக்க வேண்டுமானால் நமக்குள் இருளின் கிரியைகள் இருக்கக் கூடாது. II கொரிந்தியர் 6ஆம் அதிகாரம் 14 ம் வசனத்தில் பவுல் சொல்வதை கவனியுங்கள்; ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கிய மேது. ஆம், பிரியமானவர்களே, இருளின் காரியங்களை செய்து ஒருவராலும் வெளிச்சத்தை பிரதிபலிக்க முடியாது.

மெய்யான ஒளியாகிய கிறிஸ்து, நம் வாழ்வின் மூலம் பிறருக்கு வெளிச்சமாயிருப்பதற்கு நம்மை நாமே அனுமதிக்க வேண்டும். நற்கிரியைகளையும், ஒளியின் கிரியைகளையும் செய்யவும் சிந்திக்கவும் நம் வாழ்வை ஒப்புக் கொடுக்க வேண்டும்.

I தெசலேக்கேயர் 5:8 ம் வசனத்திலிருந்து நாம் வாசித்தால், நாம் தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்க வசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவை யும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம் என்று சொல்லுகிறது. எனவே, ஜீவ ஒளியை பிரகாசிக்கச் செய்கிற ஒரு வாழ்க்கைக்கு ஒப்புக் கொடுத்தல் அவசியமாகும்.

வாலிபர்களாகிய நாம் படிக்கும் கல்லூரிகளிலோ, பணிபுரிகிற இடங்களிலோ, ஜீவ ஒளியை பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய சொற்களால், செயல்களால் நாம் வெ ளிச்சத்தை பிரகாசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். நாம் செய் கிற ஒவ்வொரு காரியமும் பிதாவிற்கு மகிமையை சேர்க்கும் வண் ணம் இருக்க வேண்டும். வெளிச்சத்தின் கிரியைகளை செய்ய எந்த விதமான தயக்கமும் இருக்கக் கூடாது. இது சற்று கடின மாய்த் தோன்றினாலும், தேவனின் துணையோடு நாம் முயன் றால், நிச்சயம் இது சாத்தியமே!

பவுல் எபேசியருக்கு இப்படியாக எழுதுகிறார். எபேசியர் 5ம் அதிகாரம் 8ம் வசனத்தில், முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயி ருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர் கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். பிரிய மானவர்களே அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவை களுக்கு எதிர்த்து நின்று இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் வெளிச்ச மாகப் பிரகாசிக்கவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். எனவே, நாம் மதியற்றவர்களாய் இராமல், நம்முடைய அழைப்பை புரிந்து கிறிஸ்துவாகிய ஜீவ ஒளியைப் பிரதிபலிக்கிற வாழ்க்கை வாழ நாம் நம்மை ஒப்புக் கொடுப்போம். தேவன் நமக்கு உதவியாக இருப்பார். ஆமென்!

ஆதியாகமத்துப் பிதாக்கள் வாழ்ந்த ஆண்டுகள்

ஆதாம்	**930 வருடங்கள்**
சேத்	**912 வருடங்கள்**
ஏனோஸ்	**905 வருடங்கள்**
கேனான்	**910 வருடங்கள்**
மகாலாயெல்	**895 வருடங்கள்**

சிறுவர் பகுதி

Hello குழந்தைகளே! எப்படி இருக்கீங்க? நீங்கள் எல்லாரும் நலமாயிருப்பீர்கள் என நம்புகிறேன்.

திருமறை ஆசானில் வரும் குழந்தைகள் பகுதியைத் தவறாமல் வாசித்து பயனடைகிறீர்கள் என்றும் நம்புகிறேன். தேவன் நம்முடைய தவறுகளையும், பாவங்களையும் மன்னிக்க வேண்டுமானால், நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டுமென்று கடந்த மாதம் படித்தோம்.

இம்மாதம், பழைய ஏற்பாட்டிலுள்ள நோவா தாத்தா சம்பவத்தின் மூலம் உங்களுக்கு ஒன்றைச் சொல்லப் போகிறேன். (ஆதியாகமம் 5– 9 அதிகாரங்கள்). நமக்கு ஒரு வேளை நோவா தாத்தா பற்றிய காரியங்கள் தெரிந்திருந்தாலும், இதில் அடங்கியுள்ள சில பாடங்களை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் நினைவில் கொள்ளும்படி மீண்டும் கவனிக்கப் போகிறோம்.

முதலாவது, தங்களுடைய துன்மார்க்க வாழ்வினிமித்தம் ஓட்டு மொத்த உலகமும் அழிய நேர்ந்தாலும், ஒரே ஒரு குடும்பத்தை மாத்திரம் தேவன் எப்படிக் காப்பாற்றினார் என்று நான் உங்களுக்கு சொல்லப் போகிறேன். தேவன் நினைத்திருந்தால் உலகம் முழுவதையும் அழித்திருக்க முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யாமல் தன் வார்த்தைகளுக்கு உண்மையாயிருந்த நோவாவின் குடும்பத்தை 40 நாள் பெரு வெள்ள மழையிலிருந்து பாதுகாத்தார். அவருக்குப் பிரியமாயிருந்தால் அவர் நம்மை ஒரு போதும் கைவிடமாட்டார். எச்சூழலிலும் நமக்கு ஒத்தாசை புரிவார். நமது அன்றாட வாழ்வில் தேவனுக்குப் பயந்து அவருக்கு எப்பொழுதும் உண்மையாயிருந்தால் அது போதும்.

இரண்டாவது, நோவாவின் விசுவாசம் குறித்துப் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். பேழை கட்டுவது ஒரு சாதாரண வேலை அல்ல. அங்கே நோவா கர்த்தர் என்னென்ன சொன்னாரே அவைகளை அப்படியே விசுவாசித்து, அவர்

கட்டளையிட்டவைகளைச் செய்து முடித்தான். அது போல, சிறு பிள்ளைகளாகிய நீங்கள், கர்த்தர் எப்பொழுதும் உங்களோடிருக் கும்படி கர்த்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

மூன்றாவது, நோவா சம்பவத்திலிருந்து கிடைக்கும் வேறொரு பாடத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அவனுடைய மூன்று குமாரரும், தங்கள் தகப்பன் தங்களைச் சரியாய் நடத்து வார் என்று நம்பி தகப்பனுக்கு உதவி செய்து தகப்பன் சொன்ன வைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள். நான் பேழை கட்டப் போகி றேன் எனக்கு உதவி செய்யுங்கள் என்று நம்முடைய தகப்பன் மார்கள் கேட்டால் உதவி செய்ய நம்மில் எத்தனை பேர் ஆயத்த மாக இருப்போம்? அது ஒரு சிறிய படகு அல்ல. மிகப்பெரிய கப் பல், பெரிய அளவுகளைக் கொண்டது. அதுபோல, நம்முடைய தகப்பன்மார்கள் வேத வாசிக்கச் சொன்னால் எத்தனை பேர் வாசிக்க ஆயத்தமாயிருப்போம்?

பிள்ளைகளே! இதைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள். தேவ னுக்கும், உங்கள் பெற்றோரின் நல் வார்த்தைகளுக்கும் கீழ்ப்படி வதை உறுதி செய்யுங்கள். அதற்கு மேலாக, அவருக்குப் பிரிய மான வழியில் நடந்தால் அவர் ஒரு போதும் கைவிடமாட்டார் என்று விசுவாசியுங்கள். நீதியான வாழ்க்கையை சிறு பிராயம் முதலே வாழ ஆரம்பியுங்கள்! சரியா!

அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.

சிறுவர்களுக்கான வேத வினா (படிக்க அப். 5:1-11)

1. நோவாவின் மூன்று குமாரர்கள் யார் யார்?
2. எத்தனை நாட்கள் பெருவெள்ளம் இருந்தது?
3. பேழைக்குள் எத்தனை பேர் இருந்தார்கள்?
4. பேழை எந்த மரத்தால் கட்டப்பட்டது?
5. பேழையின் அளவுகள் என்ன?
6. ஜலப்பிரளயம் முடிந்த பிறகு தேவனுடைய வாக்குத்தத்தம் என்ன?

சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

பெனிட்டா டென்னி சரோன்	– காங்கயம்
தலையரசன் மோகன்தாஸ்	– திருச்சி
சகாய புஷ்பராஜ்	– வேலூர்
ரோஸ்வின் ஜெலிந்தா	– திருச்சி
ஜோஸ்வா ரோஷன்	– காங்கயம்
ஜாஸ்பர் பிரின்ஸ்	– காங்கயம்
கிங்ஸ்லி ரூபஸ்	– காங்கயம்
ஜெனிபர் ரெபேக்கா	– காங்கயம்

வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு... Sis. **லாவின் பென்னி**

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் **திருமறை ஆசான்** முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை **டிசம்பர்** மாத இதழில்)

II **இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்** (5-10 அதிகாரங்கள்)

1) தன்னீரில் மிதந்தது எது?

2) எலிசாவைச் சுற்றிலும் இருந்தவைகள் என்ன?

3) குற்றம் நம்மேல் சுமரும் என்று சொன்னவர்கள் யார்? ?

4) கர்த்தருடைய வார்த்தையின்படி நடந்தது என்ன?

5) தேசத்தில் பஞ்சம் எத்தனை வருஷம் இருந்தது?

6) தேவனுடைய மனுஷன் யாரை நோக்கி அழுதார்? ?

7) சமாதானமில்லாமையின் இரண்டு காரணங்கள் என்ன?

8) யெகூவின் சேனாபதியின் பெயர்?

9) தன் கன்களுக்கு மையிட்டு தன்னை சிங்காரித்தவள் யார்?

10) மலலுலாதிக் கிடமாக மாற்றப்பட்டது எது?

அக்டோபர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. ஆகாப், மோவாபியர் (1:1)
2. எலியா (1:3)
3. சுழல் காற்றினால் (2:1)
4. கில்காலிலிருந்து (22:2)
5. எரிகோவிலிருந்து (2:5)
6. யோசபாத் (3:1)
7. மேசா (3:4)
8. எலிசாவின் வேலைக்காரன் (4:12)
9. கர்மேல் (4:25)
10. நாகமான் (5:1)

சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

ஜெனிபர் சுரேஷ்	-	கேத்தி, பாலடா
ரவிச்சந்திரன்	-	அம்பத்தூர், சென்னை
C. தர்மராஜ்	-	முள்ளிவிளை
V.S.S. பால்ராஜ்	-	மதுரை
கிளாடிஸ் ரமேஷ்	-	வேலூர்
V.S. ரூபவல்யா	-	தூத்துகுடி
T. கலையரசன் மோகன் தாஸ்	-	திருச்சி
S. ஜெயராஜ்	-	கோவை
Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன்	-	கடலூர்
C. அருள்ராஜ்	-	சென்னை
சமாதான ராஜ்	-	கோவில்பட்டி
K.S. மாணிக்கவாசகம்	-	திருச்சி
ரெபேக்காள் ஜேசுராஜ்	-	திருச்சி
தே. தனம் பேன்ஸி	-	விழுப்புரம்
தெபோரான் ஸ்டீபன்	-	தும்பல், சேலம்
M. செல்வம்	-	வெள்ளலூர்
ராமசாமி	-	காங்கயம்
உமா தேவி	-	காங்கயம்
பெர்னீஷ்	-	திருப்பூர்
மேஷியா	-	திருப்பூர்
செல்வமணி	-	சென்னை
சங்கீதா	-	காங்கயம்
ராமச்சந்திரன்	-	காங்கயம்
இளவரசி	-	காங்கயம்
சாலமோன்	-	காங்கயம்

தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்

இன்னோபென்னி மார்டின்

நாம் ஒவ்வொருவரும் நம் அன்றாட வாழ்வில் அன்பான தேவனுடைய அளவில்லா தயவை தாராளமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். தேவ தயவை என் வாழ்வில் நான் ருசி பார்த்ததே இல்லை என்று ஒருவர் சொன்னால் அவர் எல்லை மீறி பொய் சொல்லுகிறார் என்று தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய தயவு அவருடைய அருமையான பண்புகளுள் ஒன்றாக இருந்து நம்மை எப்பொழுதுமே பரவசப்படுத்துகிறது. இப் பண்பு பண்பாடிய தாவீதை ஆச்சரியத்தை ஆழ்த்தியதினால் தான் ஒரு முறை அவர் தேவனைப் பார்த்து **மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுசகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்று கேட்க வைத்திருக்கிறது** (சங்கீதம் 8:4). இந்த தேவ தயவு தான் நம் அன்றாட ஆசீர்வாதங்களின் ஆதாரமாக இருக்கிறது.

அதே நேரத்தில் தேவனுடைய மற்றொரு முகத்தை நம்மால் மறுக்கவும் முடியாது, மறக்கவும் முடியாது. ஆம், அவர் கண்டிப்பானவர் என்பதை நாம் அனைவரும் கண்டிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும். இப்பேருண்மை பலருடைய புருவங்களை உயர்த்தி, தயவுள்ள தேவன் கண்டிப்பாகவும் இருப்பாரா என்று பலரை இரு துருவங்காளக பிரியச் செய்கிறது. இக்கட்டுரையின் தலைப்பாக காணப்படும் **தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்** என்னும் வாக்கியம் ரோமர் 11:28-ல் இடம் பெற்றிருக்கிறது. இந்த ரோமர் 11-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் இஸ்ரவேலர்கள் தேவனால் நிராகரிக்கப்பட்டதைக் குறித்து தெரிவிக்கிறார். அதே நேரத்தில் அவர்கள் தேவனால் முற்றிலுமாக நிராகரிக்கப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இப்பின்னணி தகவல்களுடன் தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் குறித்து நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

தேவனுடைய தயவு

பிரியமானவர்களே! ஆபத்துக்கள் நிறைந்த இவ்வுலகில் தேவனுடைய தயவினால் தான் ஒவ்வொரு நாளையும் நாம் நகர்த்திக் கொண்டிருக்கிறோம். இவ்வுலகில் எந்த ஒரு இடத்தையும் நம்மால் பாதுகாப்பான இடமாக பார்க்க முடிவதில்லை. கோணலும் மாறுபாடுமான சந்ததியின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 2:15). பரபரப்பும், பரவசமும் நிறைந்த